தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 494

கீதசங்கரம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 494

॥ श्रीः ॥

अनन्तनारायणनामधेयपञ्चरत्नकविकृतम्

॥ गीतशङ्करम् ॥

பஞ்சரத்ன கவி என்றழைக்கப்படும்
அனந்தநாராயணன் இயற்றிய

கீதசங்கரம்

பதிப்பாசிரியர்:
சாஹித்ய சிரோமணி,
S. இராஜலக்ஷ்மி, M.A., B.L.I.S.,
சம்ஸ்க்ருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

2006 விலை : ரூ. 35

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	கீதசங்கரம்
பதிப்பாசிரியர்	:	S. இராஜலக்ஷ்மி
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	494
மொழி	:	சம்ஸ்கிருதம் – தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2006
தாள்	:	TNPL 18.6 kgs.
நூல் அளவு	:	21 x 14 c.m.
பக்கங்கள்	:	72
படிகள்	:	250
எழுத்து	:	16 & 12
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இசைநூல்
விலை	:	ரூ. 35

வெளியீட்டாளர் முகவுரை

உலகப்புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் சம்ஸ்கிருதத் துறையில் கீத சங்கரம் என்னும் இசைநூல் பர்னல் தொகுதியில் இடம் பெற்றுள்ள காகிதச் சுவடி ஆகும். தேவநாகரி எழுத்தில் B. No. 6661, D. No. 10951 என்ற எண்ணில் உள்ள இந்நூல் தற்போது வெளிவருகின்றது.

இந்திய இசை மரபில் இந்துஸ்தானி, கர்நாடக சங்கீதம், தமிழிசை எனப் பல்வேறு வகைபாடுகள் தொன்றுதொட்டுத் திகழ்கின்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் மற்றும் சங்கீத வாக்கேயக்காரர்களும் அற்புதமான கீர்த்தனங்களை பாடி அருளியுள்ளார்கள். இப்படிப்பட்ட கீர்த்தனங் களையும், பாடல்களையும் பயின்று நல்ல இசையோடு பாடப்பட்ட நம் உள்ளத்தில் அன்பு, கருணை, அருளுடைமை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட குணநலன்கள் ஒருவர் உள்ளத்தே நிறைய, தூய உள்ளமும், தெளிந்த சிந்தனையும் வளர்ந்து, நன்னெறியைத் பின்பற்றித் தாமும் தம்மைச் சார்ந்த சமுதாயமும் வாழ துணையாக அமைகின்றன. ‘தமிழோடிசை பாடல் மறந்தறியேன்’ என்ற அப்பர் கூற்றும், ‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்’ என்று திருஞானசம்பந்தர் பாடியிருப்பதும், ‘ஏழிசையாய், இசைப்பயனாய், என்னுடைய தோழனுமாய்’ என்று சுந்தரர் இறைவனைப் பற்றியும் இன்னிசையைப் பற்றியும் கூறுவதில் இருந்து, இனிய சங்கீதத்தின் மூலம் இறைவனை சுலபமாக அடைந்துவிடமுடியும் என்பது விளங்குகிறது.

இந்து மதத்தின் வெவ்வேறு கடவுளரை வைத்து கீதங்கள் எழுந்துள்ளன. அந்த வகையில் தற்போது வெளிவரும் கீதசங்கரம் என்னும் நூலும் ஒன்றாகும். இந்நூலை இயற்றியவர் தஞ்சை அரசர் சரபோஜியின் அரசவைப் புலவராகத் திகழ்ந்த பஞ்சாத்ன கவி என்று அழைக்கப்பட்ட அனந்தநாராயணன் என்பவர் ஆவார். இவர்

கி. பி. 1700 முதல் 1750 வரையிலான மன்னர் முதலாம் சரபோஜியின் ஆட்சிக் காலத்தில் இந்த கவிஞர் அரசவைக் கவிஞராக இருந்தார். இவர் இந்நூலில் பஜனை சம்பிரதாயத்திற்கு ஏற்ப கருத்து மாறாமல் செய்யுட்களை பல்வேறு ராகத்திற்கும், தாளங்களுக்கும் ஏற்ற வகையில் மாற்றி அமைத்து கவிதைகளைப் புனைந்துள்ளார். கதையின் சூழ்நிலைக்கேற்றவாறு மேளகர்த்தா ராகங்களையும், இந்துஸ்தானி ராகங்களையும் தக்கபடி ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். இருபத்துநான்கு பாட்டுகள் இருபத்துநான்கு ராகங்களில் இந்நூல் அமைந்துள்ளன. தஞ்சையில், சிவபெருமானைக் குறித்த சைவசமய விழாக்களில் பாகவத சம்மேளனம் போல் சைவ சம்மேளனங்களும், நடந்ததற்கு இந்த நூல் ஒரு அத்தாட்சியாகிறது.

எளிய முறையில் பதிப்பித்து நம் கரங்களில் திகழச் செய்துள்ள நூலக சம்ஸ்கிருத பண்டிட் திருமதி எஸ். இராஜலக்ஷ்மி அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
7- 10 - 2006

முன்னுரை

சங்கீதத்திற்காக எழுதப்பட்டுள்ள கீர்த்தனங்கள் பாடல்கள் அனைத்துமே இறைவனின் கருணையைப் பெருமையை விளக்கு முகமாகத்தான் இயற்றப்பட்டுப் பாடப்பட்டு வருகின்றன. இதன் பயனாகச் சைவப் பெரியோர்களும், வைணவப் பெரியோர்களும் தோன்றி அரும் பெரும் பாடல்கள் இயற்றி, பக்தி நெறி வளரக் காரணமாயிருந்திருக்கின்றனர்.

'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்ற அப்பர் கூற்றும், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்' என்று திருஞானசம்பந்தர் பாடியிருப்பதும், 'ஏழிசையாய், இசைப்பயனாய், என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் இறைவனைப் பற்றியும் இன்னிசையைப் பற்றியும் கூறுவதில் இருந்து, இனிய சங்கீதத்தின் மூலம் இறைவனை சுலபமாக அடைந்துவிட முடியும் என்பது விளங்குகிறது.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் மற்றும் சங்கீத வாக்கேயக்காரர்களும் சுரங்களையும், அற்புதமான கீர்த்தனங்களையும் பாடி அருளியுள்ளார்கள். அதற்கேற்ற இராகங்களையும் தாளங்களையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றர்.

இப்படிப்பட்ட கீர்த்தனங்களையும், பாடல்களையும் பயின்று நல்ல இசையோடு பாடப்பட்ட நம் உள்ளத்தில் அன்பு, கருணை, அருளுடைமை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட குணநலன்கள் ஒருவர் உள்ளத்தே நிறைய, நிறைய தூய உள்ளமும், தெளிந்த சிந்தனையும் வளர்ந்து, நன்னெறியை பின்பற்றித் தாமும் தம்மைச் சார்ந்த சமுதாயமும் அதைப் பின்பற்றி வாழ துணையாக அமைகின்றன.

தமிழ்மொழியின் பழங்காலம் சங்ககாலம் எனப்படும். இது முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். இடைச்சங்க நூல்களில் தொல்காப்பியமும், கடைச்சங்க நூல்களில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்களிலும் இசையைப் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளார். மேலும், சிலப்பதிகாரம், திவாகரம், பாஸ்கர நிகண்டுகளில் இருந்தும் பண்டைய தமிழிசைப் பற்றிய பல செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது.

அப்பர், சம்மந்தர், சுந்தரர், ஆகிய சைவ நாயன்மார் தேவாரப் பாடல்கள் இயற்றியும் மாணிக்கவாசகப் பெருமான், திருவாசகம் இயற்றியும் சைவத்தையும், தமிழ் இசையையும் வளர்த்தனர். பன்னிரு வைணவ ஆழ்வார்கள் இயற்றிய பாடல்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டன. இவையெல்லாம் நமக்குக் கிடைத்துள்ள பழங்கால இசைச் செல்வங்கள்.

13-ஆம் நூற்றாண்டில் சாரங்கதேவர் 'சங்கீத ரத்னாகரம்' என்னும் நூலை இயற்றினார். இதில் இவர் நாதம், சுரம், இராகம், தாளம், இசைக்கருவி முதலிய செய்திகளை விவரிக்கின்றார்.

14-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலர் சங்கீத சுதாகரம் என்னும் நூலை இயற்றினார்.

15-ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் தோன்றிய அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்களை இயற்றி அருளினார்.

17-ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்தில் தோன்றிய புரந்தரதாஸர் இசை பயிற்சிக்கு ஏற்ற வகையில் கீதங்கள் முதலியவற்றையும் பல கன்னட கீர்த்தனங்களையும் தேவர்நாமா என்கிற பாடல்களையும் இயற்றினார்.

இராமாத்யர் என்ற இசை வல்லுநர் ஸ்வர மேள கலாநிதி என்ற இசை இலக்கண நூலை வடமொழியில் இயற்றினார். நாராயண தீர்த்தர் என்பார் கிருஷ்ண லீலா தரங்கிணி என்ற சமஸ்கிருத நூலை இயற்றினார். இதில் அடங்கிய பாடல்களுக்கு தரங்கம் என்று பெயர்.

17ம் நூற்றாண்டு விஜயநகர பேரரசில் தஞ்சையும், மதுரையும் நாயக்க அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டன. நாயக்க அரசர்கள் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டார்கள். சோமநாதர் என்ற இசை அறிஞர் இராக விபோதம் என்னும் இசை இலக்கண நூலை இயற்றினார். அகோபிலர் என்ற இசை அறிஞர் சங்கீத பாரிஜாதம் என்ற இசை இலக்கண நூலை எழுதியுள்ளார். 18-ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் தருக்கள், விருத்தங்கள் மூலம் இராம நாடகம் என்ற ஓர் இசை நாடகத்தை இயற்றினார்.

18-ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் சியாமா சாஸ்திரி, தியாகையர், முத்துசாமி தீக்ஷிதர் ஆகிய மூவரும் திருவாரூரில் பிறந்து இசை வல்லுநர்களாக விளங்கினர். தீக்ஷிதர் சம்ஸ்கிருத மொழியிலும், தியாகையர் தெலுங்கிலும், சியாமா சாஸ்திரி சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு மூன்று மொழிகளிலும் கீர்த்தனங்களை இயற்றினார். இசைத் துறையில் ஒரு பெரிய சாதனையை இம்மூவரும் நிகழ்த்தியுள்ளனர்.

19-ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் சுவாதித்திருநாள் சம்ஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி முதலிய பல மொழிகளில் கீர்த்தனைகள் செய்தார். இராமநாதபுரம் சீனிவாச ஐயங்காரும், பட்டணம் சுப்பிரமணிய ஐயரும், தெலுங்கில் கீர்த்தனைகள் செய்தனர். கவி குஞ்சரபாரதி, சுப்பராம ஐயர், சிதம்பர பாரதி, வேதநாயகம்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், முதலிய பலர் தமிழில் பாடல்கள் இயற்றி இசையை வளப்படுத்தினார்கள்.

வங்காளத்தில் திருமாலைக் குறித்து எழுந்த இயக்கத்தின் சார்பாக கீதகோவிந்தம் என்ற நூல் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் ஜெயதேவர். பஜனை சம்பிரதாயங்களில் பாடப்படும் அஷ்டபதி என்னும் பாடல் வகை இந்த நூலில் இருந்துதான் தோன்றியது. கீதகோவிந்தத்திற்கு பல உரைகள் எழுந்துள்ளன. பல மொழிகளிலும் இந்தநூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கண்ணனின் ராஸகிரீடையை வர்ணிப்பதாக பெரும்பாலான செய்யுட்கள் அமைந்துள்ளன. இந்த நூலை ஒட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்து மதத்தின் வெவ்வேறு கடவுளரை வைத்து கீதங்கள் எழுந்துள்ளன. அந்த வகையில் தற்போது வெளிவரும் கீதசங்கரம் என்னும் நூலும் ஒன்றாகும்.

மீனாட்சி சுந்தரேஸ்வரரை வைத்து சதாசிவ தீக்ஷிதர் கீதசுந்தரம் என்னும் நூலை இயற்றினார். திருத்தொண்டர் புராணத்தில் காணப்படும் சிவபெருமானின் பல்வேறு லீலைகளை இந்த நூலில் ஆசிரியர் பயன்படுத்து உள்ளார். இதைப் போலவே தஞ்சை அரசர் சரபோஜியின் அரசவைப் புலவராகத் திகழ்ந்த பஞ்சரத்ன கவி என்று அழைக்கப்பட்ட அனந்தநாராயணன் 'கீதசங்கரம்' என்ற நூலை இயற்றினார். சிவபெருமானைப் பற்றிய புராணக்கதைகளில் அவர் பார்வதியை மணம் முடித்து, தாரகனின் வதத்திற்காக முருகப்பெருமானை தோற்றுவித்த ராசக்கீரீடைகளை பக்தி உணர்வோடு பாடுவதாக இந்த நூல் அமைந்துள்ளது. காளிதாசனின் குமாரசம்பவம் எட்டாவது சர்க்கத்தில் காணப்படும் கதையையும் வைத்துக்கொண்டு நுலாசிரியர் பஜனை சம்பிரதாயத்திற்கு ஏற்ப கருத்து மாறாமல் செய்யுட்களை பல்வேறு ராகத்திற்கும், தாளங்களுக்கும் ஏற்ற வகையில் மாற்றி அமைத்து கவிதைகளைப் புனைந்துள்ளார். கதையின் சூழ்நிலைக்கேற்றவாறு மேளகர்த்தா ராகங்களையும், இந்துஸ்தானி ராகங்களையும் தக்கபடி ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். இருபத்துநான்கு பாட்டுகள் இருபத்துநான்கு ராகங்களில் இந்நூல் அமைந்துள்ளன.

ராதா கல்யாணம் போன்ற பாகவத சம்பிரதாய நிகழ்ச்சிகளில், கீதகோவிந்த அஷ்டபதிகளையே கேட்டு பழகிய காதுகளுக்கு சிவபெருமானின் திருமணம் குறித்து நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகள் தஞ்சையில் பல்கிப்பெருகி இருந்தன என்பதற்கு கீதசுந்தரம் என்னும் நூலும் இப்போது பதிப்புக்கு எடுத்துக்கொண்டிருக்கும் கீதசங்கரம் என்னும் நூலும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தஞ்சையில், சிவபெருமானைக் குறித்த சைவசமய விழாக்களில் பாகவத சம்மேளனம் போல் சைவ சம்மேளனங்களும், நடந்ததற்கு இந்த நூல் ஒரு அத்தாட்சியாகிறது.

ஆசிரியர் குறிப்பு :

கி. பி. 1700 முதல் 1750 வரையிலான மன்னர் முதலாம் சரபோஜியின் ஆட்சிக் காலத்தில் இந்த கவிஞர் அரசவைக் கவிஞராக இருந்தார். இவரது தந்தை ம்ருத்யுஞ்ஜயன், தாய் பிரகதாம்பாள், கிருஷ்ண தீக்ஷிதர் இவரது தந்தை வழி பாட்டனார். அனந்தயஜ்வா என்பவர் இவரது கொள்ளுப் பாட்டனார். இவர் பல்வேறு இடங்களில் சுற்றிவிட்டு, கடைசியாக தஞ்சைக்கு வந்து சேர்ந்தார். அப்போது மன்னர் முதலாம் சரபோஜியின் அரசவையில் நான்கு கவிகள் இருந்தார்கள். தன்னை ஐந்தாவது கவியாக சேர்த்துக் கொள்ளும்படி மன்னரை இவர் வேண்டிக் கொண்டார். அதன்படி மன்னரும் அவரை பஞ்சரத்ன கவி என்ற பட்டப்பெயரோடு தனது அவையில் சேர்த்துக்கொண்டார்.

நமது நூலகத்தில் காணப்படும், ராகவ சரித்திரம் (3723) என்ற நூல் இவரால் எழுதப்பட்டது. என்று Dr. Aufrecht என்ற நூல் விபரப்பட்டி ஆசிரியர் கருதுகின்றார். ஏனெனில் இந்த (ராகவ சரிதம்) நூலின் இரண்டாவது சர்க்க முடிவில் इति पञ्चरत्न कवि कृतौ राघव चरिते ... என்று காணப்படுகிறது. அரசர்களாக இருந்துகொண்டு கவிஞர்களாகவும் இருந்தவர்கள் நமது நாட்டில் ஏராளம். இந்த நூலைத் தவிர இந்த ஆசிரியர்

ஆனந்தவல்லி ஸ்தோத்திரம் (T. D. 19464) என்ற சிறு துதியையும் எழுதியுள்ளார். இவரது நூல்களின் நடை எளிதாகவும், படிப்பதற்கு இனிமையாகவும் சூழ்நிலைக்கேற்ற அணிகள் சரியானபடி அமைந்திருப்பனவாகவும் உள்ளன. நூல்களை படிக்கும் ரசிகர்கள் கவிஞரின் திறமைக்கண்டு வியப்பதில் ஐயம்ஏதும் இல்லை.

சுவடி வரலாறு

உலகப்புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் சம்ஸ்கிருதத் துறையில் கீத சங்கரம் என்னும் இசைநூல் பர்னல் தொகுதியில் இடம் பெற்றுள்ள காகிதச் சுவடியாகும். நாகரி எழுத்தில் B. No. 6661, D. No. 10951 என்ற எண்ணில் உள்ள இந்நூலே தற்போது வெளிவருகின்றது.

நன்றியுரை

இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் திரு. சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப., அவர்களுக்கும் இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணை நின்ற சரசுவதி மகால் நூலக நிர்வாக அலுவலர் மற்றும் நூல் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர பல உதவிகள் புரிந்த நேஷனல் கல்லூரி பேராசிரியர் முனைவர் மா. அனந்தநாராயணன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலக கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S. இராஜலக்ஷ்மி,
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
3 - 9 - 06.

*****

கதைச் சுருக்கம்

மாளவி ராகம்

மாயையுடன் இரண்டறக் கலந்திருக்கும் பரமேச்வரனைப் போற்றுகிறது. எல்லாமாகப் பரவி நிற்கும் அவனது உடலில் அறிவாற்றல் பரவியுள்ளது. மாயையாகி நிற்பதில் இறைத் தன்மையும், மாசுபட்ட உடலில் மானிடமும் பரவி நிற்கின்றன. (அதாவது எல்லாமாகி நிற்கும்போது அறிவாற்றலாகவும், மாயையினால் உலகியல் பொருட்களாக விளங்கும்போது, அவற்றினுள்ளே காணப்படும் இறைத் தன்மையாகவும், உலகிலுள்ள ஜீவராசிகளில் உயிராகவும் அவன் விளங்குகிறான்) மேகத்தில் மின்னல் கொடி போல, உலகின் ஒளியாகி விளங்குகிறான். எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் இறைவன், கவியைப் புனிதப்படுத்துமாறு வேண்டப்படுகிறான். தூய இரத்தினக் கல் எவ்வாறு அது பதிக்கப்பட்டுள்ள தங்கத்தையும், அருகில் கட்டப்பட்டுள்ள கிளிஞ்சலையும் ஒருங்கே அழகுறச் செய்து விலைமதிப்பற்றதாக ஆக்குகிறதோ, அதைப்போல கவியையும் புனிதப்படுத்துமாறு வேண்டுகிறார் கவிஞர். பிறகு தனது ஆசிரியரைக் கவி போற்றுகிறார்.

பைரவி ராகம்

அரக்கர்களை அழித்து, அறிஞர்களை மதித்து, உலகை ஆனந்தப்படுத்தி, சிந்தாமணியை அணிந்து, புரங்களை எரித்து, வணங்கியவர்களை உயரச் செய்தவனே ! சந்திரகலையை தரித்து, கண்ணின் நெருப்பால்

மன்மதனையும் எரித்து, கையில் சந்திரனையும் சூரியனையும் கண்களாகக்கொண்டு உலகியல் வாழ்க்கையிலிருந்து பக்தர்களை விடுவித்து, அவர்களின் பாடல்களால் காட்சியளிப்பவனே! பிரம்மாவினால் கால்களில் அர்ப்பணம் செய்யப்பட்ட வெண்தாமரை மலர்களை உடையவனே!

முருகப்பெருமானின் பரிவார தேவதைகளால் வணங்கப்பட்ட பாதங்களைக் கொண்டவனே ! தான் அணிந்துள்ள பெரிய பாம்பு மாலைகளால், முத்துமாலை களின் அழகைக் குறைத்தவனே ! முனிவர்களின் மனதில் நிறைந்தவனே !

வஸந்த ராகம்

பரமேச்வரனுக்கும் பார்வதிக்கும் நடைபெற்ற திருமணம் விவரிக்கப்படுகிறது. நந்திகேச்வரர் கூறுவதாக அமைந்துள்ளது.

தமால மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. அந்தணர் களின் வேதகோஷங்களும், கிளிகளின் பேச்சும், அந்த இடத்தை சப்தத்தால் நிரப்புகின்றன. மன்மதனைப் பார். இது அவனது நேரம். அவனது நண்பன் வஸந்தனின் கடமைகள் மிக அதிகம். அவனில்லாமல் காட்டில் மன்மதனுக்குப் பலமில்லை. வண்டுகள் ரீங்காரமிடுகின்றன. குயில்கள் கூவுகின்றன. குரவக மலர்கள் மணம் வீசுகின்றன. தென்றல் வீசுகிறது. கேதகீ மலர்கள் தங்கம் போல் மலர்ந்து வழிப்போக்கர்களை மிரட்டுவது போல் உள்ளன. மாம்பூக்கள் முதலானவை மன்மதனின் பாணங்கள் ஆகின்றன. முத்துப் போன்ற வாஸந்தீ மலர்களின் மொட்டுகளும் நிறைந்துள்ளன. கிளிகளின் அலகு போன்ற சிவப்பு நிறமுடைய புரச மலர்கள் அழகுற விளங்குகின்றன. குங்குமம் போன்ற நிறமுடைய

அசோக மலர்கள் நெருப்பு எரிவது போல் காணப்படுகிறது. பலவிதமான பறவைகள் சிறகுகளைப் படபடவென அடிக்கின்றன. காலமற்ற காலத்தில் வந்த மன்மதனின் தோழன் வசந்த காலத்தில் வினோதம் நிகழ்ந்தது. பூக்களின் அரங்கமாக விளங்கும் காட்டைப் பற்றிய வர்ணனையைப் பஞ்சரத்னகவி உனது கருணையால் பாடுகிறார்.

நாதநாமக்கிரியா ராகம்

தென்றல் காற்று வீசுகின்றது. குயில்கள் கூவுகின்றன. மலர்களின் வரிசைகள் வில்லால் வீசப்படுகின்றன. மன்மதன் ரதியைப் பார்க்கிறான். ரதியும் மன்மதனை நோக்குகிறாள்.

உலகை மயக்கும் மணம் நிரம்பியுள்ள மலர்களால் செய்யப்பட்ட வில்லைக்கொண்டு, பலவிதமான விசித்திரமான இரத்தினக் கற்களையும், முத்துக்களையும் மாலைகளாக மன்மதன் அணிந்துள்ளான். வழியில் காணப்படும் மாம்பூக்களை கிளிகளாலும், வண்டுகளாலும் நுகரச் செய்தவனும், வழிபோக்கர்களின் மனைவிகளைக் காதலில் ஆழ்த்துபவனும், ஆம்பல், நவமல்லிகை, தாமரை, மாம்பூ, அசோகமலர் இவை பூத்திருக்கும் காட்டினுள்ளே சுகமான எண்ணங்களை ஏற்படுத்துபவனும், மஹாவிஷ்ணு, பரமேச்வரன், பிரம்மா முதற்கொண்டு, எல்லா தேவ, அசுரர்களுக்கும் மனதில் வேறு எண்ணத்தை தோற்றுவிப்பவனும் ஆக மதன் இருக்கின்றான். இவன் பார்வதி பரமேச்வரர்களை சேர்த்துவைக்கும் சாதனமாக விளங்கட்டும்.

தவத்திலிருக்கும் பரமேச்வரனுக்குத் தனது பணிவிடையால், மகிழ்ச்சியை ஏற்படுத்தும் கௌரி, தனது மனதுடன் பேசுகிறாள்.

தேவகாந்தாரி ராகம்

சம்பரனின் எதிரியான இந்திரனின் மாளிகையிலிருந்து தோன்றாத, அதே சமயம் அவரது கண்ணைத் தனது பிறப்பிடமாக்கொண்ட நெருப்பை உடையவரும், மனச் சஞ்சலமில்லாமல் தியானத்தில் ஈடுபட்டுள்ளவரும், மனமாற்றத்தை அடக்கியவருமாகிய ஹரனை நினை மனமே! பிறகு பரமேச்வரனின் பல குணங்களை விவரித்து, அப்படிப்பட்டவரை, "நினை மனமே" என்று பார்வதி, தன் மனதுக்குக் கட்டளையிடுகிறாள்.

காம்போதி ராகம்

திருமண வயதை அடைந்த பார்வதி, மனதால் பரமேச்வரனை தியானித்தபடி, தோழியிடம் இவ்வாறு பேசுகிறாள். "மதனுக்கு ரதியின் பொருட்டு ஏற்பட்ட ஜனனம் (மன்மதன் மீண்டும் ரதி மட்டும் பார்க்கும்படியான உடலைப் பெற்ற கதை) கதையைக் கூறுவாயாக" என்கிறாள். தனது பாதி உடலை ஈச்வரனுக்கு அளிப்பது போலவும். இந்தப் ப்ரபஞ்சத்தையே பயமுறுத்தக் கூடிய வேடமணிந்தவள் போலவும், சுவர்கத்தையே எரிப்பதில் வல்லமை மிக்க சிரிப்பை உதிர்ப்பவளாக, பலவேறாகக் கற்பனையில் மூழ்கினாள்.

பூபாள ராகம்

பார்க்கும் இவ்வுலகம் எல்லாம் மாயை என்ற வேதங்களின் கருத்தைப் பாடல் வடிவமாகக் கவிஞர் விளக்குகிறார்.

பார்க்கும் இவ்வுலகம் கிளிஞ்சலும், வெள்ளியும் போன்றது. கிளிஞ்சலில் வெள்ளி தெரிவது உண்மையல்ல. ஆகவே உண்மையான வெள்ளி கிளிஞ்சலில் தெரியாது. அது ஒன்றே உன்னிடத்திலும் என்னிடத்திலும் அது வேறுபட்ட

தல்ல. இதுவே ஈச்வர மாயை . இந்த ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவன் வீடுபேறு அடைகிறான். அவனுக்கு இந்தப் ப்ரபஞ்சம் வ்யாவஹாரிக ஸத்யம். பாரமார்த்திக ஸத்யம். ப்ரஹ்ம ஐக்யமே. (இப்படிப்பட்ட தியானத்தில் அமர்ந்துள்ள பரமேச்வரனைப் பற்றி கௌரியிடம் தோழி கூறினாள்).

ஸௌராஷ்ட்ர ராகம்

தனது ஒப்பனைகளுக்கோ, காலை அல்லது மாலை வேளைகளுக்கோ, முக்கியத்துவம் அளிக்காமல், தாமரை, சந்தனம் இவைகளைத் தூற்றியவாறு, பிரிவாற்றாமையால் வருந்துகிறாள் பார்வதி. தன்னை எவ்வாறாவது அதிலிருந்து விடுவிக்குமாறு தோழியை வேண்டுகிறாள். தென்றலை வெறுக்கிறாள். தன் உடலையே பாரமாக நினைக்கிறாள். மலர்ப்படுக்கையில் படுத்தவாறு, எவ்வாறேனும் தனது விரஹ தாபத்தைப் போக்குமாறு தோழியைக் கேட்கிறாள்.

தேசாக்ஷி ராகம்

இந்தச் செய்யுள்கள் பரமேச்வரனைப் பார்த்து வேண்டுவதாக அமைந்துள்ளது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, கௌரி பரமேச்வரனிடம் இவ்வாறு வேண்டுகிறாள். "ஆபரணமான பாம்பை எடுத்து வீசுங்கள். கொல்லப்பட்ட மன்மதனை எவ்வாறாவது உயிர்பெறச் செய். பிட்சாடன வேடத்தை விடு. ரத்தம் சொட்டும் பிரம்ம கபாலத்தை எறிந்துவிடு யானைத் தோலைப் போர்த்திக் கொள்ளாதே. சுபமான ஆடையணிகலன்களை அணிந்து கொள்" என்று கூறுகிறாள்.

ஸ்ரீ ராகம்

பிறவிப் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கும் அறிவிலிகளையும், அறிவாளிகளையும் பார்த்து ஒரு முனிவர் கூறுகிறார். மலரால் ஆன விதானத்தின் மீது அமைந்துள்ள

பொன்மயமான விமானத்தின் கீழ், ஆகாய கங்கையுடன் பரமேச்வரன் விளங்குகிறார். தேவர்களும், மற்றவர்களும் கண்டுகளிக்கும்படி கனகசபையில் அவர் நடனம் ஆடுகிறார்.

மலஹரி ராகம்

தனது கணவனைத் தன்வயப்படுத்திய பதிவ்ரதையான பார்வதி, பரிஷ்காரம் (திருத்தப்பட்ட) செய்யப்பட்ட சங்கரரைப் பார்த்துக் கூறுகிறாள். உனக்கு அணிகலன்களால் எந்தவித தோஷமும் இல்லை. அணிகலன்களாக நீ நினைப்பவை எல்லாவற்றையும் விட்டுவிடு. தங்கமயமான அணிகலன்களால் உன் உடல் பிரகாசிப்பதை நீ பார். இரண்டு கையினால் கேயூரங்களையும், இடுப்பில் நல்ல வஸ்திரத்தையும், காலில் நல்ல பாதகுறடுகளையும், கைகளில் மரகதக் கற்களால் பதிக்கப்பட்ட கங்கணங்களையும் தரிப்பாயாக என்று கூறுகிறாள்.

சங்கராபரண ராகம்

யோகத்தில் இருக்கும் சங்கரரிடம், பார்வதியின் தோழி பார்வதியின் நிலைப் பற்றி இவ்வாறு கூறுகிறாள். பார்வதியானவள் தியானிக்கிறாள். மயக்கமடைகிறாள். புலம்புகிறாள். உன் குணங்களைப் பாடுகிறாள். வீட்டில் தாபத்தால் மயக்கமடைகிறாள். கண்ணீர் விடுகிறாள்.

சிவன் மீது ஏற்பட்ட தாபத்தினால், பார்வதியிடம் ஏற்பட்ட மாறுதல்களையும், அவளது எண்ணங்களையும் தோழி கூறுகிறாள். வெம்மையால் அவள் தன்னைக் கைகளால் மறைத்துக்கொள்ளும்போது அவளுக்கு குளுமை தரக்கூடிய பொருட்களால் பணிவிடை செய்தால், அவள் கோபம் கொள்கிறாள். எவ்வாறு பேசுவேன் ? கங்கை நீரும் வெம்மையை ஏற்படுத்துகிறது. தென்றல் காற்றும் தேவையான உபசாரத்தைச் செய்யவில்லை. மலர்ப் படுக்கையும் தணல் படுக்கையாகிறது. மலர் மாலைகள்

மன்மதனின் பாசக் கயிறாகிறது. குளுமையான சந்திர ஒளியும் வெம்மை ஏற்படுத்துகிறது.

முகாரி ராகம்

சிவன் மீது ஏற்பட்ட தாபத்தினை உடனடியாக ஈசனுக்கு தெரிவிக்கும்படி பார்வதி கூறுகிறாள். தங்கமயமான ஆஸனத்தில் அமர்ந்து, முன்பனிக் காலத்தில் விசும் காற்றில் செண்பக மலர்களின் மணம் விச, மிகுந்த மணமுள்ள தாமரை மலர்ந்துள்ள நீரின் அருகில், கண்களை மூடி ஈசன் அமர்ந்திருக்கிறார்.

மராவி ராகம்

கோகர்ணேசனிடம் சென்று தோழி பார்வதியின் நிலை பற்றிக் கூறுகிறாள். அவளைக் காப்பாற்றும்படி வேண்டு கிறாள். "பாம்பின் வளையம் போன்ற உனது கைகளால் அவளை வளைத்து தென்றல் காற்று போன்ற உனது மூச்சுக் காற்றால் அவளை அமைதிபடுத்துவாயாக.

தேவராடி ராகம்

மன்மதனுக்கு எதிரியான சந்திரனைத் தலையில் வைத்துள்ள ஈசன் கௌரி எந்த நிலையில் இருக்கிறாளோ அதே நிலைக்குத் தள்ளப் டுகிறார். மணிமயமான மாலைகள் கிழே நழுவ, நீரின் அருகாமையில் இருந்தும், சந்திரனின் ஒளியில் இருந்தும், காட்டின் மயில்கள் தங்கள் தோகைகளால் விசிறியும், மேகங்கள் மழையைத் தூவியும், அவரது தாபம் தீரவில்லை.

கேதாரகௌளம் ராகம்

இவ்வாறு ஈசன் துயர்ப்படும்போது நீ மட்டும் ஏன் இவ்வாறு வருந்துகிறாய் ? சங்கரரிடம் மனதைச் செலுத்து. தினமும் அவருக்குத் பணிவிடைசெய். உனது முகத்தாமரையின் தேனைப் பருகுபவர் அவர் பிறைச்

சந்திரனைத் தனது மகுடமாக அணிந்தவர். ரதிமன்மதர்களின் மங்களகரமான, அழகான, இல்லம் அவரது முகம். உனது யௌவனத்தை பயன் உள்ளதாக ஆக்குக. மேனா(தாய்)வின் மனோரதத்தை நிறைவேற்று.

முகாரி ராகம்

அடக்கத்தால் விரஹத்தை அடைந்து சினத்தால் மனம் குழம்பிய மலைமகளை ஏற்ற சொற்களால், முறைப்படி, ஈசன், அவளைப் பார்த்துக் கூறினார். உன்னிடத்தில் சிநேகமாக இருப்பவரிடத்தில் சினம் கொள்ளாதே. உனது தாமரைக் கண்ணால் நோக்கினால், துயரம் வெகு தூரத்துக்கு விலகிவிடும். மனதைச் சந்தோஷத்தால் நிரப்பிக்கொள். உனது நட்புக்காக வந்திருக்கும் என்னை நீ வருந்தச் செய்கிறாய்.

சாரங்க பைரவி ராகம்

கணவனின் ஏற்புடைய பேச்சுக்குச் செவி சாய்த்த பார்வதி, புன்முறுவல் பூத்தவளாக இருந்தாள். அப்போது அவளது தோழி, அவள் செய்வேண்டியதைக் கூறினாள். தினந்தோரும் மன்மதக் கடவுளை வென்ற ஈசனைப் பூசித்து வா. புரங்களை எரித்தவரும் தாமரையில் விளங்கும் பிரம்மாவாலும், தாமரைக் கண்ணனான விஷ்ணுவாலும் அடைய முடியாதவரும், ஆகிய ஈசனை, நல்ல வஸ்த்ரங்கள், மான்தோல், தர்ப்பையால் செய்யப்பட்ட ஆஸனம் இவைகளால் உபசரி. குங்குமம், சந்தனம், கரும்புச்சாறு, விளாம்பழம் முதலியவைகளை நிவேதனம் செய்து தீபம் முதலியவைகளால் ஆராதனை செய்து மகிழ்விப்பாயாக. அவரது பல நாமங்களைச் சொல்லி போற்றுவாயாக.

மத்யமாவதி ராகம்

எல்லாவற்றுக்கும் ஆதி ரஸமாகிய ச்ருங்கார ரஸத்தின் ஸ்வரூபமாக விளங்கும் இந்த ப்ரபஞ்சத்தையே மோஹத்தில்

ஆழ்த்துகிற, ஸந்தோஷத்தைக் கொடுக்கிற மந்தார மலரின் நறுமணத்தைக் கொண்டு விளங்கும் கௌரி சங்கரரை, ஸந்தோஷமாக இருக்கக் காண்கிறேன். தாமரை போன்ற பார்வதியின் முகத்தைக் கண்டவுடன் ஈசன் மிகவும் மகிழ்கிறார். அவளது முகம், சந்திரனைப் பழிப்பதாகவும், பாற்கடலின் கரையில் காணப்படும் முத்துக் குவியல் போலவும், அவள் கழுத்து பலவிதமான மணிகள் கட்டப்பட்டுள்ளதாகவும், (அவைகளை தியானித்த மாத்திரத்தில் மனம் விரும்பியதைத் தரும் சிந்தாமணியாக விளங்குகின்றன), குயில்களின் கூவுதலையும் தேனீக்களின் ரீங்காரத்தையும் அங்கிகரித்த வஸந்தனின் இருப்பிடமாகவும், கஸ்தூரி, சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்களைத் தடவிய உடலை உடைய ஈசனுடன் சேர்ந்ததாகவும், புதிய அன்புக்கு ஏற்றதாக அமைக்கப்பட்ட இயற்கை அழகுடன் காணப்பட்டது.

தேசராடி ராகம்

பார்வதி தலையில் சூடிக்கொண்டிருந்த ரத்தினக்கல்லின் ஒளி சந்திரனின் ஒளியை ஒத்ததாக விளங்கியது. இப்படி வெளிச்சமூட்டப்பட்ட அறையில் ஈசனைப் பார்த்துப் பார்வதியின் தோழி கூறினாள்.

முல்லைப்பூ மொட்டின் வரிசையை ஒத்த பற்களை உடையவளே, இந்த அந்தப்புரத்தில் உடனே புரத்தை எரித்த சிவனை மனம் மகிழச்செய் என்று பார்வதியைப் பற்றியும், ஈசனைப் பற்றியும் பலவாறு புகழ்ந்து பேசி, இங்கு மகிழ்ச்சியாக இருக்குமாறு தோழி, பார்வதியைக் கேட்டுக்கொள்கிறாள்.

நாதநாமக்ரியா ராகம்

சங்கரர் பார்வதியைப் பார்த்துக் கூறுகிறார். இந்த மலர்ப் போன்ற இடத்தை அழகுறச் செய். (இந்த இடம் நீ இங்கு

இருப்பதால் அழகாக உள்ளது) என்றுகூறி பார்வதியின் அழகை வர்ணிக்கிறார்.

மங்களகௌசிக ராகம்

பார்வதியும் ஈசனும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, சிவசைலம் என்றழைக்கப்படும் கைலாய மலையில் மகிழ்வுடன் இருந்தனர்.

ஹமீரகல்யாணி ராகம்

இயற்கைக்கு ஏற்ற மன நிலையோடு அன்பும் ஏற்பட அவர்களிருவரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

॥ श्रीः ॥

अनन्तनारायणनामधेयपञ्चरत्नकविकृतम्

॥ गीतशङ्करम् ॥

श्री गणेशाय नमः ।

प्रारीप्सितस्य ग्रन्थस्य निर्विघ्नेन समाप्तये।
मङ्गलायतनं शंभुं वन्दे वागीश्वरं हरिम् ॥ 1

1. मालविरागेण गीयते ।

शमित जगत्त्रितये त्वयि मायालीना
गर्भगता खिलजगदतिदीना।
निर्मलनिगमवेद्य जय देव विभो
त्वयि सति सृष्टिपरे भगवति
सा माया विक्षिपतीश जगत्त्रय काया ॥ (निर्मल) 2

प्रविशति वेदनिधे भवति जगत्यधुना।
चेतनता यदि भवता विभुना॥ (निर्मल) 3

मायिक वपुषि शुभे विशसि यदीश्वरता।
कलुषित वपुषि तु ते मानुषता॥ (निर्मल) 4

तिर्यक् जन्तु कुले जीवतामुपयासि
तटिदिव जलदे लीनतां यासि ॥ (निर्मल) 5

विधिमुख विबुधगणे तव महिमा ।
बहुधा त्वयि सति निवसति लसति च वसुधा ॥ (निर्मल)6

जगति तु भेदमितेतरतमता ।
विशदातनुते तां सा विभिदापशदा ॥ (निर्मल) 7

पावय परमकवे पञ्चरत्नवचनम् ।
मणिमिव विमलं कनकं काचम् ॥ 8

निर्मल निगमागमवेद्य जयजय देव विभो ।

जगज्जन्मादिकार्यस्य कारणं वस्तु शाश्वतम् ।
सङ्कीर्त्य सगुणं रूपं तस्यैव प्रतिपाद्यते ॥

2. भैरवीरागेण गीयते ।

दनुकुलमानविभञ्जनबुधरञ्जन ।
जगदानन्दन भानजयजगदेकविभो ॥ 1

चिन्तामणिकृत मण्डन पुरखण्डन ।
प्रणतजनोन्नतिदान ॥ (जय) 2

चन्द्रकलाधर शङ्करऽभयङ्कर ।
नयनानलहतमार ॥ (जय) 3

शशधर दिनकर लोचन भवमोचन ।
भक्तजनोदितगान ॥ (जय) 4

कमलभवनुतपदकमलकलित ।
सकलशारदनीरदधवल ॥ (जय) 5

गिरिजाकुच गिरिचन्दन ।
गुहनन्दजनताराधितचरण ॥ (जय) 6

भूरिभुजङ्गमभूषणगतदूषण ।
अगणितमुक्ताभरण ॥ (जय) 7

पञ्चरत्नवच्चवचन गेय उचित देय ।
मुनिजनमानसधेय ॥ (जयजगदेकविभो) 8

पाणिग्रहण माङ्गल्यं प्रस्तुत्य शिवयोर्द्वयोः ।
भाविकार्याय मन्दन प्रादुर्भावः प्रसज्यते ॥

अकालकृत सन्नाहमाकलय्य मनोभवम् ।
चिन्तयन्परमात्मानं प्राहेदं नन्दिकेश्वरः ॥

३. वसन्तरागेण गीयते ।

अविहित दोहल मृदुल मनोहर सुरभिळबहुल तमाले ।
द्विजकुल कलकलमिलितशुकारवपूरितबहुविध साले ॥

स्मरमवलोकय समयोयन्ते ।
सहचरधर्मा बहवो विपि मने तेन विना न वलन्ते ॥ 1

मधुकरकलरवमिलन झरीकृत कूजितकोकिल जाले ।
कुरवक कुसुमपराग करंवितमलयसमीरणबाले ॥ (स्मरमव) 2

विकसित कैतकदलमिषसुमशरतर्जन पथिक समाजे ।
द्रुत कनकाकृति कुडमलसंततिगुछनिरन्तर राजे ॥ (स्मरभव) 3

ललित रसाल विशाल सुमङ्कुर जालमनोभवबाणे ।
सङ्कुचदंबुजनिकरनिशानकवर्तुलदलमिषशाणे ॥ (स्मरभव)4

अविरतविसृमर सौरभ मेदुरमल्लिमतल्लि विकाशे ।
मुक्ताफलनिभ मुकुल विराजित वासन्तीकृत वासे ॥ (स्मरभव)5

शुकतुण्डाकृति सुमनो भासित किंशुकपाटलिताशे ।
कुङ्कुम सुमर सयोजितसितपटशोणाशोकहुताशे ॥ (स्मरभव) 6

विविधविहङ्गमपक्षविधूनन जनितपरागपयोदे ।
अनवसरागत मनसिज सहचर सौरभसमय विनोदे ॥ (स्मरभव)7

प्रसवाकर वनवर्णन परपद पञ्चरत्न कविर्गीयते ।
तव करूणाकर हिमगिरिदुहितुश्चन्द्र कलाकरशीते ॥ 8

स्मरमवलोकय समयोयन्ते
सहचर धर्मा बहवो विपिने तेन विना न वलन्ते ॥

4. रामक्रियारागेण गीयते

मलयानिल रथकीरतुरङ्गमकूजितकोकिलशाली ।
मधुकरसज्जितपुष्यशरासनयोजितसुमनोमाली ॥

मदनोरतिमवलोकयते ।
रतिरपि मदनमवलोकयते ॥ 1

भुवन विमोहन परागपिञ्चरशरपूर्णेषुधि धारी ।
नानामणिगणविचित्र कोमलमुक्ताफलमय हारी ॥(मदनो)2

रतिमुखसरसिजचुम्बन लोलुपचित्ततया यतमानम् ।
मोहवशेन मुहुर्मुहुरुन्मदमञ्ज मद्भुतगानम् ॥ (मदनो) 3

पथिशुकमधुकरमुखरमनोहरललितरसालविशाले ।
पथिकवधूजनभावविदारणकुसुमशरावृतशाले ॥ (मदनो) 4

अभिमुखरतिकुचकलशयुगोपरिविलिखन्पत्रगमाङ्कते ।
नीलोत्पल नवमल्लीपङ्कजचूताशोकवनान्ते ॥ (मदनो) 5

कठिनस्तनभरजघनोढश्वित पुलकालङ्कृतकाया ।
पथि परिरभ्य विहृष्य पुनः परिहासरुचिश्रितमाया ॥ (मदनो) 6

हरिहर विधिमुख निखिल सुरासुरमानस भेदनकारी ।
धृततूणीरशरासनमाधवमग्रेकृत्य विहारी ॥ (मदनो) 7

पञ्चरत्नकविकल्पितमन्मथयानकथामृतपानम् ।
भवतु भवानीपशुपतिघटनासाधानमधिगतगानम् ॥ 8

मदनोरतिमवलोकयते रतिरपि मदनमवलोकयते ।
शुश्रूषया तोषयन्ती शङ्करं तपसि स्थितम् ।
गृहं गतापि सा गौरी मनस्संबोध्य भाषते ॥

5. देवगान्धारिरागः ।

शंबरवैरिविनाभवनोदितनयनहुताशनफालम् ।
भौतिकसंप्लवसमयज्ञमुज्वलदायसभावित फालम् ॥1

ध्यानेरतमिवहरमविकारं ।
स्मर मम मानसशमितविकारम् ॥ 1

सरसिजकेसरसोदरभासुरसान्द्रजटाभरकान्तम् ।
अम्बुजकैरवबन्धुविलोचनमद्धयमनिशं भात्नम् ॥ (ध्याने) 2

शंखस्फटिक शशांक सुधारस दुग्ध समाकृति भागम् ।
निटिलनिशाकरसमभागोपरिकल्पिततत्पर भागम् ॥ (ध्याने) 3

समयविजृंभितकुवलयदलचयशोभाजित्वरवामम् ।
अनवसरागतपिकशुकमलयसमीरणसंहृतकामम् ॥ (ध्याने)4

मुनितनयावन समयोदञ्चितपादतलाहतकालम् ।
अभिचरणाध्वरहुतवह संभवघोरारवमृगपालम् ॥ (ध्याने) 5

चिन्मुद्राजपमालालङ्कृतकरयुगल घृतपाशम् ।
मकुटतटस्फुरदिन्दुशकलगलदमृतासेचनकासम् ॥ (ध्याने) 6

मदनमनोहरवदनसरोरुहञ्चितशशधरबिंबम् ।
कुन्दप्रतिभटदन्तद्वितियुगदन्तच्छदजित बिम्बम् ॥ (ध्याने) 7

पञ्चरत्नकविकल्पितगुणगण चिन्तामणिमयमाला ।
शमयतु दुरितं कलयतु कामं कलुषितकल्पकसाला ॥ 8

ध्यानेरतमिव हरमविकारम् ।
स्मरसममानस शमितविकारम् ॥

6. कांबोदिरागेणगीयते

सञ्जातपाणिग्रहणं शंरकरं शशिभूषणम्
उदासितारं मन्वाना भवानी प्राह तां सखीम् ।
अथ सविधागमतत्परयाहितचिन्तासंततिजालम् ।
मदनोज्जीवन कोमलयालघुपादतलाहतकालम् ॥

रतये जनितमदनशरीरम्
कथय कथां सखि रहसि मया सह रमयसि तादृशशीलम्॥ (रतये) 1

मंदाक्षोदयविनम्रया परिपश्यन्तं पराभावम् ।
परिकर परिजनजनितभियाबुधसंसारद्रुमदावम्॥ (रतये) 2

कथयामपि केलिगृहं गतमुनि भावित चिन्मयकायम् ।
पर्यङ्कस्थलसङ्गतया न तु शमितविकारममायम् ॥ (रतये) 3

शय्यनीयोपरि विलग्नयाखिल जगतां कारणमेकम् ।
अर्धाङ्गीकृत शरीरयात्मनिविश्वोत्पादनिसेकम् ॥ (रतये) 4

विविधविमोहनरञ्जनया परिकल्पितभेद विकारम् ।
कामकलारचनोत्सुकयानिटिलेक्षणनिर्जितमारम् ॥ (रतये) 5

कुसुमपरिष्कृतकुन्तलया ननु भुवनभयङ्करवेषम् ।
विविधमनोरथकातरया निजवपुषा निर्जितशेषम् ॥ (रतये) 6

नील वलाहकमेचकया चिरनिस्तोयाम्बुदभासम् ।
रतिरणितोज्वलमेखलया सुरपुरदहनोचितहासम्॥ (रतये) 7

परिणतमनुतनुभावित यादिम पञ्चरत्नमुखभातम् ।
हिममयकुलगिरिकन्यकया भुवि कृतिनामस्त्वदातम् ॥ ४

रतयेजनितमदन शरीरं
कथय कथां सखि रहसि मया सह रमयसि तादृशशीलम् ॥

7. भूपालरागेण गीयते

दृश्यमानस्य जगतो मिथ्यात्व प्रतिपत्तये ।
श्रुत्यर्थं गेय रूपेण विशदी कुरुते कविः ॥

दृश्यरूपमिदं त्वयीश्वर कल्पितं कलयामि ।
सत्य चिद्घनमद्धयं तव रूप मित्यपि यामि ॥

शिवशिवेतरतया कथमिदं कलयेहम् ।
शिवशिवशिवेतरतया ॥ (शिवशिव) 1

कल्पितं जगदेतदद्धयशुक्तिरूप्यवदेव ।
सत्वहीनतया पृथङ्न तथा विभाति स देव ॥ (शिवशिव) 2

एकमेव सदन्तरं नहि नान्तरत्वयि भाति ।
तेन मायिकमेतदीश्वर भानमेव पुनाति ॥ (शिवशिव) 3

यस्य चात्मतया विभासि न तस्य साक्ष्यपदेश ।
तस्य साक्षितया विभासि जगत्त्रयं परमेश ॥ (शिवशिव) 4

आत्मतत्वमर्तृरूपमवैति संप्रति योऽपि ।
मुक्तरूपतया तदा सुखरूप एव स कोऽपि ॥ (शिवशिव) 5

तस्य विश्वमिदं विभाति पृथक्तयात्मनि नैव ।
सद्विलक्षणता यथास्य तथा सतोऽपि तथैव ॥ (शिवशिव) 6

व्यावहारिकसत्यतास्ति न सास्त्यसत्यत एव ।
व्योम नीरज तुच्छ ते वनतुच्छताऽत्र तु देव ॥ (शिवशिव) 7

पञ्चरत्न कवीश्वरेण सुनिर्मितं सुनयेन ।
गेयमभ्य सनीयमेव मुमुक्षुभिः प्रणयेन ॥ 8

शिवशिव शिवेतरतया कथमिदं कलयेहम् ।
शिवशिव शिवेतरतया ॥

गङ्गातटान्तविपिनवटमूलनिवासिनम् ।
ध्याने नरहितं शम्भुमाह गौरी दशांसखी ॥

8. सौराष्ट्ररागेणगीयते

मण्डनमनुतनुनन्दति न सखी गणयति विधुमपि भानुम् ।
निन्दति कमलं चन्दनमपि सा पश्यति खदिरकृशानुम् ॥

विरहकृशा भवदीया भव विरहकृशा भव दीया ।
मानदमदनजतापभियादिव तावकपदगमनीया ॥ 1

विरहदवानल कवलितमानसमध्यगतं ममकान्तम् ।
मोचय कथमपि मामिति कथयति सैषालपति नितान्तम्॥ (विरह) 2

नवनलिनीदल विरचित शयनम् हिमजलसिक्त सकाशम् ।
विलुलितमनसा तनुते वपुषा भस्मीभूतपलाशम् ॥ (विरह) 3

मलयजपवनं कलयति गिरिजा विसरन्मुर्मुरजालम् ।
वपुरतिभरमिव वहति सतापं विदलित मौक्तिकमालम्॥ (विरह) 4

अञ्जनकलुषित नयनजलं बहु मुञ्चति मुहुरुरुतापम् ।
कुचकलशोपरिनिपतित मासंपदमुपयाति दुरापम्॥ (विरह) 5

अतिमदनाकृति वपुरपरं तव भावनयैव निकामम् ।
धुरि परिकल्प्य सदातनपूजांकुरुते सा किल कामम्॥ (विरह) 6

मङ्गलदायांमनसिजजनितं क्षिप्रमपाकुरु खेदम् ।
कुसुमवितानित शयन तलोपरि जनयन् बहुरतिभेदम्॥ (विरह) 7

दारिद्र्या नलजनितभयं भुवि पुंसां यदि शमनीयम् ।
पञ्चरत्न कविफणित मिदं भव भक्तधनं पठनीयम् ॥ 8

विरहकृशा भवदीया भवविरह कृशाभवदीया ।
मानद मदनजतापभयादिव तावकपदगमनीया ॥

७. देशाक्षिरागेणगीयते

जननीहृदयं ज्ञात्वा चिन्तयानमिवस्थितम् ।
धैर्यमालं सा गौरी शंकरं समभाषत ॥

अपनयविषधरमणिमयहारम् ।
जीतयकथमपि भारितमारम् ।
किं तया तव शंकर चिन्तया ॥ 1

त्यज कनकाह्वय कुसुम वितानम् ।
विविधोन्मादनपित्तनिदानम् । (किं तया) 2

परिहरभिक्षाटनमतिघोरं ।
गौरवलज्जां बहुमति घोरम् ॥ (किं तया) 3

रुधिरचषककृतनारकपालम् ।
विसृज दहनमयमायसफालम् ॥ (किं तया) 4

करटित्वंङमयगजपरि धानम् ।
मुञ्च विलोपय दिव परिधानम् ॥ (किं तया) 5

अस्थि सृक्परिकर्मित फालम् ।
संमृज्योज्ज्वयशशधरबालम् ॥ (किं तया) 6

भजसि यदीश शुभप्रदरूपम् ।
फलति मनोरथतरुरनुरूपम् ॥ (किं तया) 7

पञ्चरत्नकविवरमुखजातम् ।
गिरिजागीतामृतमवदातम् ॥ 8

किं तया तव शङ्कर चिन्तया ॥

10. श्री रागेणगीयते

संसार सागरे मग्नान्प्राकृतान् बिबुधानपि ।
समीक्ष्य कारूण्यवान्मुनिः कश्चिदभाषत ॥

कुसुमविताने कनकविमाने जगदवनाय वसन्तम् ।
विरचितवेषं तनुजितशेषं जनता भजत भवन्तम् ॥

शिवशैलेशो धृतभुजगेशोधर्न ताटवनवासी ।
अमरतटिन्या अनुजभवान्या देव्या वसति विलासी ॥
शिव शैलेशोधृतभुजगेशो ॥ 1

बहुमतमदने विहरति सदने जनयन्परिजनमोदम् ।
अपगतखेदं मुखरितवेदं पश्यत विविध विनोदम् ॥ (शिवशैले) 2

अविरततानं समुदितगानं पश्यति नृत्त मुदारम् ।
प्रणमत मुदितं गणयति सहितं प्रशमितचित्तविकारम् ॥ (शिवशैले)3

बहुमणि मायां कनकसभायाम् नटनंकलयति सायम् ।
धरणी विबुधा मुदिता बहुधा ध्यायत चिन्मयकायम् ॥ (शिवशैले) 4

निबिडितकीरे घटनातीरे सांद्रतराखिलसारे ।
पालितमोदं बाणविनोदं पश्यन् हृष्यति काले ॥ (शिवशैले) 5

मञ्जुलगाने मङ्गलयाने मदयति मनुज समाजम् ।
दलयति तोदं जनयति मोदं भजनीयाकृतिभाजम् ॥ (शिवशैले) 6

अनुदिततपने मृदुतरपवने धाम निवसति सलीलम् ।
अविदितपादं प्रतिहतवादं भावय तादृश शीलम् ॥ (शिवशैले) 7

प्रकटितसेवं प्रमुदितदेवं पञ्चरत्न कविगीतम् ।
पातक भीतैर्भावविशुध्यै पठनीयं भवगीतम् ॥ 8

शिवशैले शोधृत भुजगेशोधटनातटवनवासी ।
अमर तटिन्या अनुजभवान्या देव्या वसति विलासी ॥
शिवशैले शोधृत भुजगेशो ॥

11. मलहरिरागेणगीयते

स्वाधीनपतिका साध्वी धीरा रहसिलालिता
परिष्कृतं द्रष्टुकामा पार्वती पतिमब्रवीत् ।
कलय मृदलदलदाम परिष्कृत निटिलतलोपरिभागम्
शशधर शकल समुज्वल दुद्धण मणिमकुटोदितरागम् ॥

पाहि मानद सोमशेखर मा भज भूषण दोषम् ।
यानि विभूषण भावगतान्यपि परिहर तानि सतोषम् ॥ 1

उज्वल नवनव मणिगण विलसित कुण्डल मण्डितगण्डम्
तव मुख ममलं विलसित नयनं नवमिव चन्द्रमखण्डम्॥ (पाहिमा) 2

कंबु सहोदर कण्ठ समुज्वल काश्चनमय सरजालम् ।
विलुठतु नाभेरुपरिमनोभव डोले वोचितकालम् ॥ (पाहिमा) 3

उडुगण परिवृत हिमकर बिम्बमिवोपरि विनिहितनीलम् ।
विलसतु जठरे तव मणिपतगंमदन तुरङ्ग गमकीलम् ॥ (पाहिमा) 4

बहुलतरलतरहारलताहृदितारावलिरिव केशे ।
भुजयुगलोपरिकनकमये तव केयूरे ज्वलिताशे ॥ (पाहिमा) 5

कटितट सुघटित सारसनावृतकमनीयांबरवीतम् ।
विरचय पदकमलोपरि हंसकमञ्जुलशिञ्जितगीतम् ॥ (पाहिमा) 6

मरतकमणिशकलाञ्चित कङ्कण धलधलरोचिरुदारम् ।
विरचय करकमलद्धयमपि ते भक्तजनाभयपारम् ॥ (पाहिमा)7

पञ्चरत्नकविचित्तविकासजरुद्राणीपतिवेषम् ।
करगत बदरीफलमिव सुकृतं चिन्तयतामविशेषम् ॥ 8
पाहि मानद सोमशेखर मा भज भूषणदोषम् ।
यानि विभूषण भावगतान्यपि परिहरतानि सतोषम् ॥

12. शंकराभरणरागेणगीयते

योगमास्थायतिष्टंतं शंकरं लोक शंकरम् ।
प्राप्य गौरी सखी प्राह तदवस्थामिमां क्रमात् ॥

ध्यायति सीदति विलपति विततम् ।
गायति तव गुणगणमपि सततम् ॥

देवगृहे मुह्यति गौरीतापमिता ॥ 1

मुञ्चति नयनजले मुहुः विमलम् ।
सिञ्चतिमुहुरुरुकञ्चुक पटलम् ॥ (देव) 2

नालीकं न तु पश्यति बाला
नालीरपि सा दृष्टरसाला ॥ (देव) 3

भूतावेशवशेन निषण्णा ।
यदनधविलिखितकुरतिविषण्णा ॥ (देव) 4

क्रीडाव्याजविमुक्ताहारान् ।
तुलनापरिहत मुक्ताहारा ॥ (देव) 5

आतपतापिततनुमतिशेते ।
तुहिन शिलामयफलके सेते ॥ (देव) 6

रोदिति लीला कलहविलापा ।
छादितमदनविलासजतापा ॥ (देव) 7

पञ्चरत्नकविकल्पितगीतम् ।
सोमशेखरमुदेस्तु सुगीतम् ॥ 8

देव गृहे शंभोदेव गृहे ।
मुह्यति गौरीतापमिता ॥

13. आहरिरागेणगीयते

शिवानुराग जनित सन्तापं गोप्तुमक्षमा
विजने मानसीचिन्तामाह गौरीमनोरथम् ॥

आतपमिषेण यदि तापकरगोपनम् ।
शीतोपचारकृतिजनितमतिकोपनम् ।
केन वा गोपयेयं तमिह मनोरथ चिन्तयेयम् ॥ 1

हिमसलिलसेकोऽपि मम तपनसाधनम् ।
मलयजरसस्नपनमपि मानबाधनम् ॥ (केनवा)2

व्यजनपवनोऽपि मम मदनतुरगायते ।
कुसुममयशयनमपि दहनशकलायते ॥ (केनवा) 3

हारलतिका वपुषि मारपाशायते ।
शीतकिरणोपि मम तापकिरणायते ॥ (केनवा) 4

नालीकदल कलितकञ्चुलीधारणम् ।
आलिकरजः पटवदात्ततनुद्धारणम् ॥ (केनवा) 5

कर्पूरसंमिश्रजंबलजलाधिकम् ।
पश्यामि पानीयमपि तद्वदाधिकम् ॥ (केनवा) 6

शयनमतिशङ्कां हि जनयति हिमाचले ।
वलनमपि नीहारशीते शिलातले ॥ (केनवा) 7

पञ्चरत्नादिकविजाल्पितरसायनम् ।
परमशिव सायुज्यगमन सुगमायनम् ॥ 8

केनवागोपयेयं तमिहमनोरथ चिन्तयेदम् ॥

14. मुखारिरागेणगीयते

कथमपि रतिगेहं प्रापयन्ती मृगाक्षी
सरसवचन बाष्पा सादरं भाषमाणाम् ॥

अपिसपदि विदित्वा जातकामानिरेका ।
सविधसहचरी स्वां भाषमाणेतियाता ।

